system அடிப்படையில் சீர்திருத்த வேண்டும். இத்தகைய முயற்சிகளை பல மாதங்களாக எடுத்துக்கொண்டிருக்கிறோம். நிதிநிலை அறிக்கையில் குறிப்பிட்டவாறு 6 மாதங்களுக்குள் முழுமையான ஓர் அறிக்கையை–covering everybody like Government Servants, migrant labour, immigrant labour– இவை போன்று எல்லாவற்றையும் சேர்த்து ஒரு system–ஐ இங்கு சமர்ப்பிப்போம் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ராஜேஷ் குமார் அவர்களுடைய கேள்வி குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை தொடர்புடையது என்பதால் மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன் அவர்களும் பதில் சொல்லவிருக்கின்றார்கள். (குறுக்கீடு)

வினா வரிசை எண் 102, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. கிருஷ்ணமுரளி, மாண்புமிகு தொழிலாளர் நலன்–திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

102—

தொழிற்பயிற்சி நிலையம்

***16380—திரு. செ. கிருஷ்ணமுரளி:**

மாண்புமிகு தொழிலாளர் நலன்–திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடையநல்லூர் தொகுதி, செங்கோட்டை வட்டம், சாம்பவர் வடகரையில் தொழிற்பயிற்சி நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. சி.வி. கணேசன், தொழிலாளர் நலன்–திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) கடையநல்லூர் சட்டமன்றத் தொகுதி தென்காசி மாவட்டத்தில் அமைந்துள்ளது. தென்காசி மாவட்டத்தில் 3 அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களும்,

2022 ஏப்ரல் 12]

12 தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களும் இயங்கி வருகின்றன. கடையநல்லூர் சட்டமன்றத் தொகுதியில் ஓர் அரசினர் தொழிற்பயிற்சி நிலையம் இயங்கி வருகிறது. இந்தத் தொழிற்பயிற்சி நிலையங்களில் மாணவர்கள் சேர்க்கைக்குப் போதுமான இடங்கள் காலியாக உள்ளதாலும், 50 சதவிகித அரசு ஒதுக்கீட்டில் சேர்க்கை பெறும் மாணவர்களுக்கு அரசாங்கமே முழுக் கட்டணத் தொகையையும் செலுத்துகின்ற சூழ்நிலையிலும்கூட, மாணவர்கள் சேர்க்கை இல்லாத காரணத்தினாலும், கடையநல்லூர் சட்டமன்றத் தொகுதியில் புதியதாக அரசு தொழிற்பயிற்சி நிலையம் அமைக்க வேண்டிய சூழல் எழவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. கிருஷ்ணமுரளி அவர்கள், இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. பால் மனோஜ் பாண்டியன் அவர்கள்.*

முற்பகல் 11–10

திரு. பால் மனோஜ் பாண்டியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்காசி மாவட்டத்திலுள்ள கடையநல்லூர் சட்டமன்றத் தொகுதியில் சாம்பவர் வடகரையில் தொழிற்பயிற்சி நிலையம் அமைக்க வேண்டுமென்று திரு. செ. கிருஷ்ணமுரளி அவர்கள் இந்த வினாவை எழுப்பியுள்ளார்கள். அங்கே 3 அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் இருக்கின்ற சூழ்நிலை இருந்தாலும், தற்போது கொரோனா பேரிடரின் காரணமாக அதில் பாதிக்கப்பட்ட குடும்பங்களிலிருந்து அதிகமான மாணவ, மாணவியர் இந்தத் தொழிற்பயிற்சி நிலையங்களுக்கு வந்து பயிலக்கூடிய ஒரு சூழ்நிலை இருப்பதாலும், அவர்களுக்கு அரசாங்கம் ஊக்கத்தொகை கொடுப்பதாலும் அங்கே அந்த எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டிருக்கிறது. அதேபோன்று, சாம்பவர் வடகரையிலிருந்து தென்காசி தொகுதி 2 கிலோ மீட்டரிலும், அதேபோன்று, சங்கரன்கோவில் 2 கிலோ மீட்டரிலும் இருக்கின்றது. சாம்பவர் வடகரை என்கின்ற அந்த இடம் மையப் பகுதியில் இருக்கின்ற காரணத்தாலும், எதிர்காலத்தில் அங்கே இந்த எண்ணிக்கை கூட வாய்ப்பிருக்கின்றது என்பதை மனதில் வைத்தும், அதேபோன்று, இது மையப் பகுதியாக இருக்கின்ற சூழ்நிலையைக் கருத்தில் கொண்டும் அதிகமான மாணவ, மாணவியர் இங்கே சேர்கின்றார்கள் என்பதைக் கருத்தில்*

[*2022 ஏப்ரல் 12*

கொண்டும், நிதிநிலைமைக்கேற்ப வருங்காலத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதுகுறித்து பரிசீலிப்பார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழிலாளர் நலன்–திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சி.வி. கணேசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் உத்தரவின்படி தமிழ்நாட்டிலே படித்துவிட்டு வேலையில்லாமல் இருக்கின்ற இளைஞர்களுக்கு அதிகமான அளவிற்கு வேலைவாய்ப்புகளை உருவாக்கித் தர வேண்டுமென்கின்ற நோக்கத்தின் அடிப்படையில்தான் தமிழ்நாட்டில் இதுவரையிலும் இல்லாத அளவிற்கு ஒவ்வொரு மாவட்டத்திலும் இதுவரையில் 56 இடங்களில் வேலைவாய்ப்பு முகாம்களை நடத்தி, 69,010 இளைஞர்களுக்கு தனியார் தொழில் நிறுவனங்களில் வேலைவாய்ப்பை உருவாக்கித் தந்திருக்கிறோம்.* (மேசையைத் தட்டும் ஒலி)

அதுமாத்திரமல்ல; நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இது விடியலுக்கான ஓர் அரசு; இளைஞர்களுக்கு விடியலை ஏற்படுத்துகின்ற அரசு என்கின்ற அடிப்படையிலேதான் 2,877 கோடி ரூபாயை இந்தத் துறைக்கு ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள். தமிழ்நாட்டில் இருக்கின்ற அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் 91; அதிலே 71 தொழிற்பயிற்சி நிலையங்களுக்கு புதிதாக கணினிகள் வாங்குவது, தளவாடங்கள் வாங்குவது, கட்டடங்கள் கட்டுவது, புதிய அளவிலே மாணவர்களுடைய சேர்க்கையை அதிகரித்து, எதிர்காலத்திலே இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புகளை உருவாக்க வேண்டுமென்ற அடிப்படையிலேதான், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இத்தகைய நடவடிக்கையை எடுத்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை ஏற்று, விரைவிலே-தொழிற்பயிற்சி நிலையம் அமைக்க வேண்டுமானால் ஒன்றரை ஏக்கர் நிலமும், 10 கோடி ரூபாயும் செலவு செய்ய வேண்டிய அவசியம் இருக்கிறது. எனவே, இருக்கின்ற நிதிநிலைமைக்கேற்ப இதுகுறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2022 ஏப்ரல் 12]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க.சொ.க. கண்ணன் அவர்கள்.*

திரு. க.சொ.க. கண்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரியலூர் மாவட்டத்தில் உள்ள தா. பழூர் ஊராட்சி ஒன்றியம், அரியலூர், ஜெயங்கொண்டம் சட்டமன்றத் தொகுதிகளில் உள்ளடங்கிய ஊராட்சி ஒன்றியம். தா. பழூர் ஊராட்சி ஒன்றியத்தில் எந்தவிதமான கல்வி நிறுவனங்களும், அரசு மற்றும் தனியார் நிறுவனங்களும் இல்லை. எனவே, பெண் கல்விக்கு முக்கியத்துவம் அளிக்கின்ற நமது அரசு பெண்களுக்கான தொழிற்பயிற்சி நிலையத்தை தா. பழூரில் அமைத்துத் தர முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு, அமைகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழிலாளர் நலன்—திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சி.வி. கணேசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய இந்தக் கோரிக்கை குறித்து விரைவிலே நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 103, மாண்புமிகு உறுப்பினர் திரு. சபா. இராசேந்திரன், மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

103—

சமுதாயக்கூடம்

***5387—திரு. சபா. இராசேந்திரன்:**

மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நெய்வேலி தொகுதி, திருவாமூர் ஆதி திராவிடர் குடியிருப்புப் பகுதியில் சமுதாயக்கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திருமதி என். கயல்விழி செல்வராஜ், ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

நெய்வேலி தொகுதி, திருவாமூர் ஆதி திராவிடர் குடியிருப்புப் பகுதியில் புதிய சமுதாயக்கூடம் கட்டுவது, அங்கு வசிக்கும்